# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109457

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2023** FIR No.: மு.த.அ. எண் **5/2023** Date: நாள் **24.03.2023**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: **The Prevention of Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்: **7**
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **21.03.2023** Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **11.00 hrs** Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **23.03.2023** Time : நேரம் **1600 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **1600 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 55 கி.மீ. தென்மேற்கு**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **கிராம நிர்வாக அலுவலகம், பண்ணப்பட்டு கிராமம்,**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **T.சுரேஷ்பாபு** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **தங்கசாமி**
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு **42** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் **விவசாயம்** (g) Address : முகவரி **26/A,ஓடைத்தெரு, பண்ணப்பட்டு கிராமம், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**புகழேந்தி, கிராம நிர்வாக அலுவலர், பண்ணப்பட்டு கிராமம்**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**வாதியால் தாமதம்**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் 23.03.2023 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, பண்ணப்பட்டு கிராமம் 26/A,ஓடைத்தெருவைச் சேர்ந்த தங்கசாமி மகன் சுரேஷ்பாபு என்பவர், கணினியில் தட்டச்சு செய்த புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புனர், T.சுரேஷ்பாபு, வயது 42, த/பெ தங்கசாமி, 26/A,ஓடைத்தெரு, பண்ணப்பட்டு கிராமம், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம். செல் 9047429025. பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு துறை, கடலூர்.அய்யா, நான் சிதம்பரம் தாலுக்கா, பண்ணப்பட்டு கிராமம், 26/A,ஓடைத்தெரு

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. ANBALAGAN Rank , Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Cuddalore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

தி.சுரேஷ்பாபு, 24-3-23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

FS. [signature] 24/3/23
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
ADSP, V&AC, Cud.

Name: பெயர் N. DEVANATHAN
Rank: நிலை ....................No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24-03-2023 at 09.15 hrs.

என்ற முகவரியில் வசித்து வருகிறேன். என்னுடைய அம்மா வழி தாத்தா முனுசாமி என்பவருக்கும் எங்க அம்மா சாவித்திரி, எங்க தாய்மாமன்கள் காசிநாதன், செல்லதுரை என மூன்று பிள்ளைகள். என்னுடைய தாய்மாமன்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். எங்க தாத்தா முனுசாமி பெயரில் பண்ணப்பட்டு கிராம சர்வே எண். 51/109 ல் 1077 சதுரடியில் மனை இருந்தது. இதில் உள்ள கூரை வீட்டில் என்னுடைய தாய்மாமா செல்லதுரை மகன் ஸ்ரீகாந்த் குடியிருந்து வருகிறார். இந்த இடத்தை என்னுடைய அம்மாவும், என்னுடைய தாய்மாமா காசிநாதன் மகன் குமார் மற்றும் ஸ்ரீகாந்த் உடன் பிறந்த ஸ்ரீதேவி, ஸ்ரீவித்யா ஆகியோர் ஸ்ரீகாந்த் பெயருக்கு எழுதி கொடுத்தனர். இந்த பத்திரம் சிதம்பரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5124/2022 ஆக 26.10.2022 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது. ஸ்ரீகாந்த் சென்னையில் வேலை செய்து வருவதால், எங்க தாத்தா பெயரில் இருந்த பட்டாவை ஸ்ரீகாந்த் பெயரில் பட்டா மாற்றம் சம்மந்தமான வேலைகளை என்னை கவனிக்க சொன்னார். இதனால் நான் 02.01.2023 ஆம் தேதி பட்டா மாற்றம் வேண்டி ரூ.60/– பணம் கட்டி ஆன்லைனில் அப்ளை செய்தேன். பின்னர் 21.03.2023 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் பண்ணப்பட்டு VAO ஆபிஸ் சென்று, VAO புகழேந்தி என்பவரை சந்தித்து, என்னுடைய தாய்மாமா மகன் ஸ்ரீகாந்த் பட்டா விண்ணப்பம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு VAO புகழேந்தி, பட்டா மாற்றம் செய்ய ஆன்லைனில் அப்ளை செய்துட்டு வீட்டில் இருந்தால் போதுமா, VAO–வை வந்து பார்க்கமாட்டிங்களா, உங்க மாமா பையன் ஸ்ரீகாந்த் பட்டா மாற்ற அப்ளிகேஷன் கேன்சல் பண்ணியாச்சி, எனக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்தா தான் பட்டா மாற்றம் செய்ய முடியும், எனக்கு ரூ.5,000/– கொடு, அப்ப தான் ஸ்ரீகாந்த் பட்டா மாற்றத்தை நான் முடிச்சி கொடுப்பேன் என சொன்னார். அதற்கு நான் அவரிடம், பட்டா மாற்றத்துக்கான பணத்தை ஆன்லைனில் கட்டியாச்சு என சொன்னேன். அதற்கு VAO புகழேந்தி, நீங்க கட்டிய பணம் அரசாங்கத்துக்கு, நான் கேட்கிறது எனக்கு என சொன்னார். நான் அவரிடம் ஸ்ரீகாந்திடம் இந்த விசயத்தை சொல்லிட்டு வரேன் என சொன்னேன். 22.03.2023 ஆம் தேதி ஊருக்கு வந்த ஸ்ரீகாந்த்திடம் இந்த விசயத்தை சொன்னேன். அதற்கு ஸ்ரீகாந்த் லஞ்சம் கொடுத்து பட்டா மாற்றம் செய்ய வேண்டாம், லஞ்சம் கேட்கிற VAO புகழேந்தி மீது கடலூர் ஊழல் தடுப்பு துறையில் என்னை புகார் கொடுக்க

சொல்லி, VAO புகழேந்தி கேட்ட ரூ.5,000/– த்தை என்னிடம் கொடுத்தார். அதன்படி நான் இன்று 23.03.2023 கடலூர் ஊழல் தடுப்பு துறை அலுவலகம் வந்து தங்களிடம் புகார் மனு கொடுத்து கொள்கிறேன். மேலும் VAO புகழேந்தி கேட்ட ரூ.5,000/– பணத்தை கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம் xxxx) 23–03–2023.

Sir,

Received the above computer typed complaint on 23.03.2023 at about 16.00 hrs., a preliminary enquiry was made on the genuineness of the complaint through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.05/2023, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 24.03.2023 at 08.00 hrs., sd/- xxxxx 24.03.2023 (N.Devanathan), Additional Superintendent of Police, V & AC, Cuddalore.

ந. தேவநாதன் 24/3/23
(N. DEVANATHAN)
Additional Superintendent of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore